14.11.2025

OS. No.141/2024

**வா.சா.1 –** திரு.பெரியசாமி, த/பெ.திரு.பெரியான்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை(1, 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில்) :–**

என் அப்பாவின் அப்பாவின் பெயர் பெரியான் ஆகும். அவருக்கு பூர்வீகமாக சொத்துக்கள் இருந்ததா என்றால் இருந்தது. 1949 ஆம் வருடம் பிறந்தேன். எனக்கு மூத்த ஒரு அக்கா இருந்தார். அவர் திருமணத்திற்கு பிறகு குழந்தைகள் இல்லாமல் இறந்து விட்டார். அவரது கணவர் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து விட்டார். இந்த வழக்கில் கண்ட முதல் ஐந்து பிரதிவாதிகள் மற்றும் இறந்து போன சின்னதுரை ஆகியோர்கள் எனக்கு இளையவர்கள் என்றால் சரிதான். எனக்கும் சின்னதுரை சேர்ந்து ஒரே நாளில் திருமணம் 1978 ஆம் வருடம் நடைபெற்றது. என் சகோதரிகள் இளஞ்சியம், சின்னப்பொண்ணு, லட்சுமி ஆகியோர்களுக்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்பது நினைவில்லை. நான் பள்ளி படிப்பை புலிவலம் பெரமங்களத்தில் படித்தேன். நான் டிப்ளமோ இன் சிவில் இன்ஜினியரிங் துவாக்குடியில் உள்ள பாலிடெக்னிக்கில் படித்தேன். நான் 1979 ஆம் வருடம் திருச்சி பொன் நகரில் வேலைக்கு சேர்ந்தேன். அதன் பிறகு 1980 ஆம் வருடம் திருவள்ளூரில் வேலை பார்த்தேன். திருச்சியில் உள்ள கீரனூரில் வேலை பார்த்திருக்கிறேன். அசல் வழக்கில் குறிப்பிட்டுள்ள முகவரி தெற்கு காட்டூர் காவேரி நகர் 11வது தெருவில் உள்ள வீட்டில் கடந்த 25

வருடங்களுக்கு மேலாக வசித்து வருகிறேன். என் அப்பா 1968 ஆம் வருடம் இறந்துவிட்டார். அவர் இறக்கும்போது எனக்கு 19 வயது நடைபெற்றது என்றால் சரிதான். என் அம்மா உடன்பிறந்த சகோதரி பெயர் காமாட்சி அம்மாள் ஆகும். வழக்குரை ஏ அட்டவணை சொத்தாக விவரிக்கப்பட்டுள்ளது நத்தம் வீட்டு மனை இடம் ஆகும். அது ஓட்டு வில்லை வீடு ஆகும். அந்த வீட்டு மனை யார் பெயரில் உள்ளது என்றால் அந்த ஊரில் இருக்கக்கூடிய அனைத்து சொத்துக்களும் நத்தத்தில் உள்ளது. திருமணத்திற்கு பிறகு நான் தனிக்குடித்தனம் என்று கூற இயலாது. நான் எனது பூர்வீக வீட்டிற்கும் அடிக்கடி சென்று வருவேன். பூர்வீக வீட்டில் எட்டாவது பிரதிவாதி பெரிய நாயகி மட்டும்தான் குடியிருந்து வருகிறார் என்றும் நான் அந்த வீட்டிற்கு சென்றது கிடையாது என்றால் சரியல்ல. தாவாவில் கண்ட பி அட்டவணை சொத்தான சர்வே எண்.113/2N1, 122/9E14, 126/3 ஆகிய சொத்துக்களை பொறுத்து பாகபாத்திய விடுதலைப் பத்திரம் கடந்த 30.09.2019 அன்று எழுதி வாங்கி இருக்கிறேன் என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.1** ஆகும். அந்த பாக பாத்திய விடுதலைப் பத்திரம் வாங்கிய விவரத்தை நான் தாக்கல் செய்த வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு நினைவில்லை. நான் வேண்டுமென்றே உண்மை சங்கதிகளை மறைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த சொத்துக்கள் அனைத்தும் அந்த பத்திரத்தில் என் தாயாருக்கு பூர்வீகமாக பாதிக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். கடந்த 13.10.2021 அன்று என் மகன் பிரேம்குமாருக்கு என் அப்பாவின் பூர்வீக சொத்துக்கள்

**தொடர்பாக ஒரு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.2 ஆகும். அந்த விபரத்தை நான் தாக்கல் செய்த வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது மகன் ஒரு தரப்பினர் கிடையாது.**

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு வேண்டுகோளின் அடிப்படையில் ஒத்திவைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.